# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,890—1970 ජනවාරි 23 වැනි සිකුරාදා—1970.1.23

14,890 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு சனவரி மாதம் 23 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 73 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 80 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 80 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | எல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 87 | நாஞவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## பதவிகள் — வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

1. *படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. *சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளை கள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங் கள் இருக்கும்.

3. *நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக் குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினுல் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத் தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினு லும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ் வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிர காரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத் தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதி யுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்த ரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. *அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவி களுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத் தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்த மாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண் டாகும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்த மானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆடு திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுஞ் சூம் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துதலும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.*

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க.ப.த.ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இந்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். " இலங்கையர் " என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், நியமனக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் (" ஆ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.— தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

No. A. 74/X 2154/69

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### மனையியல் பிரதம வித்தியாதிகாரி பதவி

1969 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9 ஆந் திகதிய 14,875 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் மேற்குறித்த விடயம் சம்பந்தமாக வெளியான விளம்பரத்தின் 4 (இ) ஆம் பந்தி பின்வருமாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளதெனக்கொள்க :—

(4) (இ) குறைந்தபட்சம் 5 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றிருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக மனையியல் பட்டதாரியாகவும் பாடசாலைகளிலும் ஆசிரியர் கலாசாலைகளிலும் அல்லது பாடசாலைகளில் அல்லது ஆசிரியர் கலாசாலைகளில் மனையியல் திட்டங்களை ஒழுங்கு செய்வதிலும் நிருவகித்தலிலும் 5 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றவராகவும் இருக்க வேண்டும்.

அல்லது

நிருவாகத்தில் 5 வருடத்துக்குக் குறையாத அனுபவம் பெற்றிருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தால் வழங்கப்படும் மனையியல் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றவராகவும் மனையியல் கற்பித்தலிலும் மனையியல் திட்டங்களை ஒழுங்கு செய்வதிலும் நிருவகித்தலிலும் 15 வருட அனுபவம் பெற்றவராகவும் இருக்க வேண்டும்.

2. திருத்தி அமைக்கப்பட்டுள்ள தகைமைகளுக்கேற்ப விண்ணப்பித்தற்கு உரித்துடையவர்களின் விண்ணப்பங்கள் 20.2.1970 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

3. மேலதிக விபரங்களுக்கு 1969 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9 ஆந் திகதிய 14,875 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

டி. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
பகிரங்க சேவை ஆணைக்குழு.

பகிரங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ந் ஆண்டு ஜனவரி மீ 16 ந் வ.

1–863/1—23.1.70 ம் திகதிய வர்த்தமானி இல. 14,890

No. AA 105/X. 2191/69

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுத் திணைக்களம்

### கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவில் குடித்துறை எஞ்சினியரின் பதவி

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுத் திணைக்களத்தில் குடித்துறை எஞ்சினியரின் பதவிக்கென விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெறும் அச்சிடப்பட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பின்வரும் திகதிகளில் அல்லது அத்திகளுக்கு முன்னர் " செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. இல. 500, கொழும்பு 1 " என்ற முகவரியில் வந்து சேரும் படியாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் 1970.2.20.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 1970.2.27.

**குறிப்பு :**

(1) அச்சிடப்பட்ட விண்ணப்பங் படிவத்தை அனுப்புமாறு அஞ்சல் மூலம் வேண்டுகோள் விடுப்பவர், தமது முகவரி இடப்பட்ட முத்திரை ஒப்படப்படாத, 9." × 4 " அளவுக்குக் குறையாத கடித உறையையும் சேர்த்து அனுப்புவதோடு, அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையில் ஒரு உத்தியோகத்தரா, இல்லையா என்பதையும் தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவம், அல்லது அப்படிவம் தொடர்பான ஒரு கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது, அல்லது தாமதம் ஆகிவிட்டது என்ற குற்றச் சாட்டெதுவும் கவனிக்கப்பட மாட்டாது. கடைசி நாள்வரை தங்கள் விண்ணப்பங்களைத் தாமதம் செய்யும் அபேட்சகர்கள், அத்தாமதத்திற்குத் தாமே பொறுப்பாக இருப்பார்கள்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய, அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(4) **மருத்துவச் சோதனையும், பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலம் உடையவர்களாக இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுபவரிடம் பரீட்சைக்கெனச் செல்லுதல்வேண்டும். அத்தகைய மருத்துவச் சோதனைக்குரிய கட்டணத்தையும், இலங்கைக்குப் பயணம் செய்வதற்கான செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன விதிகளும் சேவை நிபந்தனைகளும்:**- பதவி நிரந்தரமானது ; அத்துடன் இளைப்பாறு சம்பளமுடையது.

3. **சம்பளம்:**—இப்பதவிக்கான திரட்டுச் சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

வருடமொன்றுக்கு ரூபா 7,800—3 × 360—8,880—9,600—4 × 360, 10 × 480, 3 × 600—17,640. திறமைகாண் தடைகள் ரூபா 9,600 முன்பும், ரூபா 13,920 முன்பும் உண்டு.

**குறிப்பு :**

(1) மேலேயுள்ள சம்பள அளவுத்திட்டத்தில் வருடாந்தச் சம்பளமாகிய ரூபா 13,440க்கு மேலான சம்பளத்தைப் பெறுவதற்கு உயர் தொழிலுக்கான முழுத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) உயர் தொழிலுக்கான முழுத் தகைமைகளைப் பெறும்பொழுது விண்ணப்பதாரர் வருடாந்தச் சம்பளமாக ரூபா 9,960 அல்லது அதற்கு மேலாகப் பெறுதிருப்பின் அத்திகதியிலிருந்து மேற்கூறிய சம்பள அளவுத் திட்டத்தில் ரூபா 9,960 வருடாந்தச் சம்பளத்தைப் பெறுவதற்கு உரிமையுடையவராவார்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குப் போதுமான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) சிறந்த பண்பும், உடல் நலமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) 20.2.1970 ஆந் திகதியன்று 35 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

(இ) (1) இலங்கைப் பல்கலைக் கழகத்தின் எந்திரவியல் பட்டப் பரீட்சையில் அல்லது, அதற்குச் சமமான ஒரு அங்கீகரிக்கப்பட்ட பட்டப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது

(2) குடித்துறை (சிவில்) எஞ்சினியர்களுக்கான பரீட்சையின் பகுதிகள் I, I, பி II ஆகியவற்றில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது

(3) லண்டன் குடித்துறை (சிவில்) எஞ்சினியர்களின் பரீட்சையில் 1 ஆம், 2 ஆம் பகுதிகளில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அவற்றிற்குச் சமமான தகைமைகளை உடையவராக இருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் வேண்டப்படும் பொழுது பின்வரும் சாதனங்களில் ஏதேனும் ஒன்றை அல்லது எல்லாவற்றையும் சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு** : ஞானஸ்நானச் சான்றிதழ்கள், அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குவிதிக் கோவையின் நோக்கத்திற்கென வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.)

(ஆ) பட்டப் பரீட்சையில் சித்தியடைந்ததற்கான சான்றிதழ், அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம் ;

(இ) பண்பு பற்றிய இரு சான்றிதழ்கள், இவற்றில் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல்வேண்டும் ;

(ஈ) உயர் தொழில் தகைமைச் சான்றிதழ், அல்லது தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ், அல்லது இவ்விரு சான்றிதழ்களும் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைக்கான சான்றிதழ்.

**குறிப்பு :**

(1) இவ்விண்ணப்பப் படிவத்துடன் சாதனங்கள், அல்லது சாதனங்களின் பிரதிகள் இணைக்கப்படக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது அவ்விதம் செய்யாமல் இருக்கும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். எனினும் தங்கள் விண்ணப்பங்கள் தங்களினால் அனுப்பப்பட்ட திகதியை அவர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும்படியாக நேராக அனுப்புதல் வேண்டும். இத்தேவைக்கென, விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட (" ஆ " எனக் குறியிடப்பட்ட) அச்சிட்ட அஞ்சல் அட்டையை உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறேதும் கடிதத் தொடர்புகளும் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரின் முகவரிக்கே அனுப்பப்படுதல்வேண்டும். அவைகளை இத்திணைக்கள உத்தியோகத்தர் எவருக்காவது அவரின் சொந்தப் பெயருக்கு அனுப்புதல் கூடாது.

8. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் I ஆம் பகுதி II ஆம் தொகுதி ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருந்தும்பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

9. விண்ணப்பப் படிவத்துடன் அபேட்சகர்களுக்கு வழங்கப்பட்ட (" அ " எனக் குறியிடப்பட்ட) அச்சிட்ட அஞ்சல் அட்டையை அதில் கூறப்பட்டிருப்பதுபோல அவர்களே நிரப்பித்திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்விதம் அவர்கள் செய்தால், இந்த அலுவலகத்தில் அவர்களின் விண்ணப்பங் படிவங்கள் கிடைத்ததுபற்றி அவர்கள் அறிவிக்கப்படுவார்கள். இத் தேவையின் பிரகாரம் நடந்து கொள்ளத் தவறிய அபேட்சகர்களுக்கு, அவர்களின் விண்ணப்பங்கள் கிடைத்ததுபற்றி அறிவித்தல் கொடுக்கப்படமாட்டாது. இத்தேவையின் பிரகாரம் நடந்து கொண்டவர்களுக்கு முடிவுத் திகதியிலிருந்து மூன்று கிழமைகளுக்குள் அவர்களின் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதற்கான அறிவித்தல் கிடையாமலிருந்தால் அவர்கள் அதுபற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி நடக்கத்தவறும் விண்ணப்பதாரர், தன் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கோரும் எந்த உரிமையையும் இழந்தவராவார்.

டி. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 1970 ந் ஆண்டு ஜனவரி மீ 16 ந உ.

1–863/2—23.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,890

இல : A107/X2193/69.

## கனிட்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் புள்ளிவிபரவியல் விரிவுரையாளர்

### II ஆந் தர பதவிகள்

கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சினுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் புள்ளிவிபரவியல் விரிவுரையாளர் II ஆந் தர பதவிகளுக்கு (ஆண்/பெண்) இருபாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் தயாரிக்கப்பட்டு பின்வரும் திகதிகளில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக எனக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(i) உண்ணாட்டு விண்ணப்பங்கள்—1970.2.20.
(ii) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—1970.2.27.

**குறிப்புகள் :**

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் :** இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்கு மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **சம்பளமும் சகாயப் படிகளும் சேவை நிபந்தனைகளும் :** இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

(i) ரூ. 6,720—12 × 360—ரூ. 11,040/– வருடாந்தம்.
(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இத்தீவிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரி எதிலேனும் கடமைபுரிய வேண்டும். தற்போது காலியிடங்கள் தெகிவலை, கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியில் உண்டு ; தெரிவு செய்யப்படுபவர்கள் இக்கல்லூரிக்கு நியமிக்கப்படக்கூடும்.

3. **நியமன நியதிகள் :**

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும்.
(ii) நியமனங்கள், முதற்கண், 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும்.

4. **தேவைப்படும் தகைமைகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) 1970.2.20 ந் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசினர் சேவையில் ஏற்கனவே நிரந்தர நியமனங்களை வகிப்பவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ஆ) (i) புள்ளிவிபரவியலை ஒரு விசேட பாடமாகக் கொண்டு அல்லது புள்ளிவிபரவியல் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்று அங்கீகரிக்கப்படும் ஒரு பல்கலைக்கழகத்தால் பொருளியலில் வழங்கப்படும் சிறப்பு விசேட பட்டம்.

அல்லது

(ii) பொருளியலை ஒரு பாடமாகக் கொண்டு, அங்கீகரிக்கப்படும் ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பட்டமும் புள்ளிவிபரவியல் தகுதித் தேர்வுப் பத்திரமும்.

அல்லது

(iii) புள்ளிவிபரவியலை ஒரு பாடமாகக் கொண்டு அல்லது புள்ளிவிபரவியல் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்று அங்கீகரிக்கப்படும் ஒரு பல்கலைக் கழகத்தால் வர்த்தகத்தில் வழங்கப்படும் ஒரு பட்டம்.

அல்லது

(iv) புள்ளிவிபரவியலை ஒரு பாடமாகக் கொண்டு அல்லது புள்ளிவிபரவியல் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்று அங்கீகரிக்கப்படும் ஒரு பல்கலைக் கழகத்தால் கணிதத்தில் வழங்கப்படும் சிறப்பு/விசேட பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(இ) தெகிவலை, காலி, கேகாலை, பொல்கொல்ல அல்லது குளியாப்பிட்டி கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளிலுள்ள பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கடமை ஆற்றுதற்கு வேண்டிய சிங்கள அறிவும் பலாலியிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியிலுள்ள பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கடமை ஆற்றுதற்கு வேண்டிய தமிழ் அறிவும் பெற்றிருக்க வேண்டும். நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படும் எவரையும் விதிக்கப்படும் ஒரு மட்டத்தில் தான் குறித்துரைக்கும் ஒரு காலத்துக்குள் சிங்களத்தில் அல்லது தமிழில் (காரியத்திற்கேற்ப) மேலும் தேர்ச்சி பெறுமாறு மகா வித்தியாதிபதி வேண்டலாம்.

(ஈ) சிறந்த நல்லொழுக்கமும் தேக ஆரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (**மு. கு.**—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு**.— (1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;
(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அவற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது, அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித்திகதியிலிருந்து மூன்று கிழமைக்கும் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,1970 ம் ஆண்டு ஜனவரி மீ 16 ந் உ.

1–863/3—23.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,890

No AB 105/X 2194/69

## ஆயுள்வேத திணைக்களம்

### ஆயுள்வேத ஆராய்ச்சி உத்தியோகத்தர் (ஆயுள்வேதம்), ஆயுள்வேத ஆராய்ச்சி நிறுவகம், நாவின்னை

ஆயுள்வேத திணைக்களத்திலுள்ள நாவின்னை, ஆயுள்வேத ஆராய்ச்சி நிறுவகத்தின் (ஆயுள்வேத) ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இவ்வலுவலகத்தினால் அளிக்கப்படும் அச்சிட்ட படிவங்களில் செய்யப்பட்டு, பின்வரும் திகதிகளில் அல்லது அதற்கு முன்னதாக செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. இலக்கம் 500, கொழும்பு 1 என்ற முகவரியில் வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும்.

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள் 1970.2.20.
(ஆ) வெளியூர் விண்ணப்பங்கள் 1970.2.27.

**குறிப்பு :**

(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை அஞ்சல்மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும், 9″ × 4″ அளவிற்குக் குறையாததும், முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லாதவரா, என்பதனையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. இறுதி நாட்கள் வரையும் விண்ணப்பங்களைத் தாமதப்படுத்தும் விண்ணப்பகாரர் அதனாலேற்படும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால், விண்ணப்பப் படிவங்களைக் குறிக்கப்பட்ட காலஎல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவுசெய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களாக இருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன்பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத்தொழில் புரிவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும், இலங்கைக்குப் பயணமாவதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.**—

(அ) இப்பதவி நிரந்தரமானதும், உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் சகாயநிதித் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர் சொந்த மருத்துவச் செய்கையில் ஈடுபடும் உரித்துடையராகார்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு:— ரூபா 6,720—12 × 360 உடன் 11 × 480—ரூபா 16,320. 11,520 ரூபாவுக்கும், 14,880 ரூபாவுக்கும் முன் வினைத்திறமைகாண் தடைகளுமுண்டு.

**குறிப்பு.**—11,040 ரூபாவுக்கு முன்னர் உள்ள வினைத்திறமைகாண் தடைகளுக்கப்பால் பதவியேற்றம் பெறுவது, நியமனத்தின் பின்னர் செய்யப்பட்ட சொந்த ஆராய்ச்சியின் அடிப்படையிலும், 14,880 ரூபாவுக்கு முன் உள்ள வினைத்திறமைகாண் தடைக்கப்பால் பதவியேற்றம் பெறுவது திணைக்களத் தலைவரினால் வேலை, நடத்தைபற்றி அளிக்கப்படும் சான்றிதழின் அடிப்படையிலும் அமையும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும், தான்—

(i) சிறந்த நன்னடத்தையும், தேகாரோக்கியமும் உடையவரென்றும் ;

(ii) **20.2.1970 இல் 30 வயதுக்குக் குறைந்தவரல்ல என்றும், 45 வயதுக்குக் கூடியவரல்ல என்றும், (திணைக்கள உத்தியோகத்தர்களுக்குக் கூடிய வயதெல்லை பொருந்தாது).**

(iii) முதல் வகுப்பு சிறப்புடன் அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேதம் கற்பிக்கும் நிலையமொன்றின் டிப்ளோமா உடையவரென்றும்,

(iv) ஆயுள்வேதத்தில் பட்டத்திற்குப் பின் பெறும் தகைமையுடையவரென்றும்

அல்லது

ஆயுள்வேதத்தில் தொடக்க ஆராய்ச்சி காரணமாக அல்லது குறிப்பிடத்தக்க பல வெளியீடுகளினால் பெற்ற சிறப்புப் பேறுகள் காரணமாக புகழ் உடையவரென்றும்.

(v) அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேத நிலையமொன்றின் ஆசிரியராக அல்லது வைத்தியராக அல்லது இரு பதவியிலும் குறைந்தது 5 வருட அனுபவமுடையவரென்றும்,

திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் ஒன்றையோ அல்லது முழுவதையுமோ வேண்டப்படும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**மு.கு.**—ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குவிதிக் கோவையின் நோக்கத்துக்கென வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்கள்.

(இ) நன்னடத்தை பற்றிய இரு சான்றிதழ்கள். அவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர்தொழில் அல்லது தொழில்நுட்பச் சான்றிதழ் அல்லது இரண்டும்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்கள்.

**குறிப்பு**— (i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிவங்களையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) வேண்டப்படும்பொழுது சாதனங்களை அளிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்கள்மூலம் அனுப்பப்படல் வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்கசேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு கடைசித்திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக அறிவித்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட (" ஆ " எனக் குறிப்பிடப்பட்ட) அஞ்சலட்டையை இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களும், அவை சம்பந்தமான வேறு தொடர்புகளும் செயலாளர், அரசாங்கசேவை ஆணைக்குழு என முகவரியிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தர்களுக்காயினும் நேராக அனுப்புதல் கூடாது.

8. இந்த வர்த்தமானியின் ஆரம்பத்தில் I ஆம் பகுதி, II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்கசேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சலட்டையை (" அ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத்தசபட்டுள்ளவாறு நிரப்பி, திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்பட மாட்டாது. இத்தேவைக்கமைய ஒழுகுபவர்கள் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்ப பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் உடனே அரசாங்கசேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை ஏதுமுடையராகார்.

டி. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்கசேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இலக்கம் 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஜனவரி மீ 16 ந் உ.

1–863/4—23.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,890

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெற்றிடங்கள்

தரம் 2 களஞ்சியப் பொறுப்பாளர் பதவிக்கு இலங்கையரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள் :**

சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம், அல்லது சமமான பரீட்சையுடன் களஞ்சியப் பொறுப்பு வேலைகளில் குறைந்தது இருவருட அனுபவமும் இருத்தல் வேண்டும்.

**வேதனக் கிரமம் :**

ரூபாய் 250—400 (15 × 10) எல்லாம் உட்பட. விணைத்திறமைகாண் தடை ரூபாய் 300 பெறுமுன்.

**வயது :**

20–35 வருடங்கள்

இணைக்கப்பட்ட படிவத்திற் கண்டவாறு, விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பதிவு அஞ்சல் மூலம், 1970 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் கொழும்பு 7, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மா அதிபருக்கு கிடைக்கும்படியாக அனுப்பல் வேண்டும். உறையின் இடதுகோடித் தலைப்பில் “ தரம் 2 களஞ்சியப் பொறுப்பாளர் ” என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

என். டி. ஜயவீரா,
மா அதிபர்.

கொழும்பு 7,
ஜனவரி, 1970.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**தரம் 2 களஞ்சியப் பொறுப்பாளர் பதவி**

1. முழுப் பெயர் : ————.

(1) முதலெழுத்துக்களுடன் பெயர் : ————.

(திரு./திருவாட்டி/செல்வி எதுவெனக் குறிப்பிடுக)

(2) முகவரி : ————.

2. பிறந்த திகதியும், பிறந்த இடமும் :

(1) 1970, பெப்ரவரி 10 ஆம் திகதி சரியான வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

(பிறப்புச்சான்றிதழ் பிரதி இணைக்கப்படல் வேண்டும்).

3. தேசிய இனம் :————.

4. கல்வியும், பயிற்சியும் :

பயின்ற பாடசாலைகள் அல்லது நிலையங்கள் : ————.

எத்திகதி முதல் எத்திகதி வரை : ————.

சித்தியடைந்த பரீட்சை : ————.

வகித்துள்ள பொறுப்பு வாய்ந்த பதவிகளும் கருமங்களும் : ————.

5. சித்தியடைந்த உயர் பரீட்சை :

சிங்களத்தில் : ————.

தமிழில் : ————.

ஆங்கிலத்தில் : ————.

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).

6. அனுபவம் : உமது முன்னைய அனுபவம், ஊழியப் பதிவுகள் ஆகியவை காலக்கிரமமான முறையில் விபரங்களுடன் தரப்படல் வேண்டும்.

நிறுவனத்தின் பெயர் : ————.

வகித்த பதவி : ————.

எத் திகதி முதல் எத் திகதி வரை : ————.

விலகக் காரணம் : ————.

7. உமது தனிப்பட்ட வாழ்க்கையில் உம்மை நன்கு அறிந்த மூன்று சான்றுதரின் பெயர்களும், முகவரிகளும் :

(1) ————.

(2) ————.

(3) ————.

8. சான்றிதழ்கள் பெற்றுள்ள மூவரின் பெயர்களும், பதவிப் பெயர்களும் :

(1) ————.

(2) ————.

(3) ————.

9. வேறு விபரங்கள் :————.

இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையும், சரியானவையும், என்று இத்தால் நான் உறுதிப்படுத்துகிறேன். இங்கு கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை அல்லது சரியானவை அல்லாதிருந்தால் தேர்வின்போது அல்லது அதற்கு முன்னர் நான் தகைமை இழந்தவனுவேன் என்பதுடன், நியமனம் பெற்ற பின்னர் சரியான விபரங்கள் தரப்படவில்லை என்று கண்டு பிடிக்கும் பட்சத்தில் நஷ்டஈடு இல்லாது பதவியிலிருந்து நீக்கப்பட்டவனுகவுமாவேன் என்பதை நான் அறிந்துள்ளேன்.

————.
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

1–865—23.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,890

## குடிவரவுக் குடியகல்வுத் திணைக்களம்

### ஆங்கில/தமிழ் மொழி பெயர்ப்பாளர் (அமய) வெற்றிடங்கள்

குடிவரவுக் குடியகல்வுத் திணைக்களத்தில் ஏற்படும் மேற் குறித்த வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் இலங்கையரிடமிருந்து கோரப் படுகின்றன.

2. கீழ்க் காணும் படிவ முறையில் அமைந்த விண்ணப்பங்கள் பதி வஞ்சல் மூலம் 1970.2.15 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக, குடிவரவுக் குடியகல்வுக் கட்டுப்பாட்டதிகாரி, த. பெ. இல. 586, கால் பொக் வீதி, கொழும்பு 1, என்ற விலாசத்துக்கு அனுப்பப்படவேண்டும். காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆங்கில/தமிழ் மொழி பெயர்ப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்" என எழுதப்படல் வேண்டும்.

3. **தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும், தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும் மொழி பெயர்க்கும் ஆற்றலுடன், கீழே கோரப்பட்டுள்ள தகைமைகளில் ஒன்றிலாவது சித்தியடைந்தி ருத்தல் வேண்டும்.

(1) (அ) ஆங்கிலம் அல்லது தமிழுடன் இலண்டன் பல்கலைக் கழகப் பொதுச் சான்றிதழ் (உயர் தரம்).

(ஆ) தமிழ் ஒரு பாடமாக ஆங்கிலத்தில் இலங்கைக் கல்விப் பொதுச் சான்றிதழ் (உயர் தரம்).

(இ) ஆங்கிலம் அல்லது தமிழுடன் உயர்தரப் பாடசாலைச் சான்றி தழ் (சிறப்பு ஆங்கிலம் அல்லது சிறப்புத் தமிழ் அல்ல)

(ஈ) ஆங்கிலம் அல்லது தமிழுடன், இலண்டன் பல்கலைக்கழக இடை நிலைக் கலைச் சான்றிதழ்; இலங்கைப் பல்கலைக் கழகப் பொதுக் கலைத் (தொடக்க) தேர்வுச் சான்றிதழ்.

(உ) பொதுத் திறைசேரியின் சிங்கள, தமிழ் தேர்ச்சித் தேர்வில் சிங்களத்தில் அல்லது தமிழில் சித்தி (உயர் தரம்).

அத்துடன் சிரேஷ்ட பாடசாலைச் சான்றிதழ் தேர்வில் அல்லது கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரணம்) தேர்வில் அல்லது உயர் தரத் தேர்வில் இரண்டாவது மொழியாக (தமிழ் அல்லது ஆங்கிலம்) குறைந்தது திறமைச் சித்தி.

(2) 1970, பெப்ருவரி 15 ஆம் நாளன்று அபேட்சகர் 19 வயதிற்குக் குறையாதவராயும் 40 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

(3) அபேட்சகர் இலங்கையராகவும் நல்லொழுக்கமுடையவராகவும், உடல் நலமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(4) **சேவை நிபந்தனைகள்.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அமய அடிப்படையிலேயே நியமிக்கப்படுவார். அரசாங்கத்தின் கீழ் அல்லது அரசாங்கத்தின் கீழுள்ள எந்த நிறுவனத்திலேனும் நிரந்தர அல்லது தற்காலிக நியமனம் கோரும் எவ்வித சிறப்பு உரிமையும் இந்நியமனம் கொண்டிலது. நிரந்தர நியமனம் ஒன்று செய்யப்பட்டதும், அல்லது அன்னாருடைய சேவைகள் தேவைப்படாதவிடத்தும் அவருடையசேவை நிறுத்தப் படும். திரும்பவும் வேலை கோரும்பொருட்டுப்பொதுத் திறை சேரிக் கிளையில் பதிவு செய்துகொள்வதற்கு இந்த நியமனம் காரணமாக எவ்வித உரிமையும் கிடையாது.

(5) வேலை செய்யும் நாளொன்றுக்கு ரூபா 12/– (திரட்டிய) வீதம் ஊதியம் கொடுக்கப்படும்.

டபிள்யூ. ரீ. ஜெயசிங்க,
குடிவரவுக் குடியகல்வுக் கட்டுப் பாட்டதிகாரி.

குடிவரவுக் குடியகல்வுத் திணைக்களம்,
தபாற் பெட்டி இல. 586,
கால் பொக் வீதி,
கொழும்பு 1, 1970 ம் ஆண்டு ஜனவரி மீ 16 ந் தி.

### மாதிரி விண்ணப்பம்

#### ஆங்கில/தமிழ் மொழி பெயர்ப்பாளர் (அமய) பதவி

1. முழுப் பெயர் :————.
2. முகவரி :————.
3. சாகியம் :————.
(இலங்கையர் பிறப்பினால்/பதிவினால். பதிவுரிமையாயின் பதிவுச் சான்றிதழ் பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக).
4. (அ) பிறந்த திகதியும் தற்போதைய வயதும் :————.
(ஆ) ————.
5. கல்வித் தகைமைகளும் கடைசியாகச் சித்தியெய்திய பரீட்சையும் நாளும் :————.
6. முன் அநுபவம் இருப்பின் :————.
7. தற்போதைய பதவி :————.
8. நீர் நீதித்தலத்தில் குற்றவியற் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட் டுள்ளீரா எனக் குறிப்பிடுக. (அப்படியாயின் விபரம் குறிப் பிடுக) :————.
9. உம்முடன் தனிப்பட்ட வாழ்க்கையில் நன்கு அறிமுகமான, உமது நற்சான்று சார்பாகச் சான்று பகரக் கூடிய இருவரது பெயர் கள் :————.
1. ————.
2. ————.
10. ஏதும் சிறப்புக் கோரிக்கைகள் :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கி றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்பட்டால் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராகக் கருதப்படுவதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுவதற்கும் பாத்திர ராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

1–858—23.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,890

---

## அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

### பதவி வெற்றிடங்கள்

கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள், தேவையெனக் கருதப் படும் தகுதிகள் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து கீழ்க் கையொப்பமிடும் உத்தியோகத்தரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**பயிற்சி பெறும் அத்தியட்சகர்**

**சம்பளவிகிதம்.**—மாதமொன்றிற்கு எல்லாம் உட்பட ரூபா 500.

**வயதெல்லை.**—15.1.1970 அன்று 22 வயதுக்கும் 30 வயதுக்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**கல்வி, தொழில் நுட்பத்தகைமை, அனுபவம் மற்றும் தகைமைகள்.**—

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பௌதிகவியல் அல்லது எந்திரவியல் பட்டம் பெற்ற ஒருவர் அல்லது சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சை ஒன்றில் தேர்ச்சி பெற்றவரும், லண்டன் அச்சுத் தொழிற் கல்லூரியின் அச்சுத்தொழில் முகாமை தகுதித் தேர்வுப் பத்திரம் அல்லது அதிகாரிகள் சபையால் அங்கீகரிக்கப் பட்ட அதற்குச் சமமான பரீட்சை ஒன்றில் தேர்ச்சி பெற்ற ஒருவராக இருத்தல் வேண்டும்.

**இனம்.**—ஆண்கள் மட்டும்.

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனச் செயலாளரிடமிருந்து பெறப்படக் கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் 1970 ஜனவரி 31 ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்பு பதிவு செய்யப்பட்ட கடிதவுறைகளில், தலைவர், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், 2பி, டி பொன்சேகா வீதி, கொழும்பு 5 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப் படல் வேண்டும்.

விண்ணப்பப்பத்திரங்களைக் கொண்ட கடிதவுறைகளின் மேல் இடது பக்கத்தில் பதவியின் பெயர் குறிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப் பத்திரங்களை நேர்முகமாகப் பெற விரும்புபவர்கள் அலுவல் நேரங்களில் இக்கூட்டுத்தாபனத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புபவர்கள் முத்திரை ஒட்டப்பட்டு தமது விலாசமிடப்பட்ட (அளவு 9″ × 4″) கடிதவுறைகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

தலைவர்,
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்.

2பி, டி பொன்சேகா வீதி,
கொழும்பு 5,
1970 ம் ஆண்டு ஜனவரி மீ 13 ந் தி.

1–966—23.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,890

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சௌக்கியப் பகுதியின் வைத்திய உத்தியோகத்தர்கள்

### பல் வைத்தியர்கள், ஆசுப்பத்திரிச் செயலாளர்கள் ஆகியோருக்கான அரையாண்டுப் பரீட்சை ஏப்ரில்—1970

சௌக்கியப் பகுதியில் வைத்திய உத்தியோகத்தர்கள் (மெடிகல் ஒபீசர்கள்), பல் வைத்தியர்கள், ஆசுப்பத்திரிச் செயலாளர்கள் ஆகியோருக்கான அரையாண்டுப் பரீட்சை 1970 ஏப்பிரில் மாதம் 4 ஆம், 5 ஆம் தேதிகளில் நடைபெறுமென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1970 ஏப்ரில் 5 ஆம் திகதி:
- அரசாங்கசேவை பிரமாணங்களும் நடைமுறைக் கை நூலும்
- ஆசுப்பத்திரியினதும், மருந்தகத்தினதும் நிர்வாகம்
- கணக்கு

2. சிங்களத்தில்/தமிழிலான வாய்மொழிப் பரீட்சை 4.4.1970 ஆம் திகதியன்று நடாத்தப்படும்.

3. பரீட்சைக்குப் பிரவேசிப்பதற்குரிய விண்ணப்பங்கள் அவரவர் கடமையாற்றும் பன்முனைப்படுத்தப்பட்ட பிரிவுகளின் தலைமை அதிகாரிகளது கந்தோர்களில் பெறக்கூடியதாக உள்ள மாதிரிப் பத்திரத்தில் நிரப்பி அனுப்பப்பட வேண்டும்.

4. பரீட்சை ஆணையாளரால் இப்பரீட்சை நடாத்தப்படும். அத்துடன் இப்பரீட்சையை நடாத்துவதற்காகப் பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் விதிகளுக்கும், பிரமாணங்களுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.

5. விண்ணப்பங்கள் அவரவர் பன்முனைப்படுத்தப்பட்ட பிரிவுகளின் தலைமை அதிகாரிகள் மூலம் பரீட்சை ஆணையாளர், மலாய் வீதி, கொழும்பு–2 என்ற விலாசத்துக்கு 18.2.1970 ஆம் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கத்தக்கதாக அனுப்பப்பட வேண்டும். 18.2.1970 ஆம் திகதிக்கு முன்பு பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பிவைக்க உதவும் பொருட்டு சகல விண்ணப்பகாரரும் தமது விண்ணப்பங்களை அவரவர் பன்முனைப் படுத்தப்பட்ட பிரிவுகளின் தலைமை அதிகாரிகளுக்கு 15.2.1970 ஆம் திகதிக்கு முன்பு போய்ச் சேரத்தக்கதாக அனுப்புமாறு ஆலோசனை அளிக்கப்படுகிறார்கள்.

15.2.1970 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படத்தக்கனவாகும்.

வி. பி. ஏ. பெரேரா.
பிரதி அதிபதி,
(நிருவாகம்),
சௌக்கிய சேவை அதிபதிக்காக.

சௌக்கிய சேவை அதிபதி கந்தோர்,
கொழும்பு,
1970 ஆம் வருடம் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி.

1-773—23.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,890

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நாடு நகர நிருமாணப் பகுதி—உள்ளூராட்சி அமைச்சு

### கதிர்காம புனித நகர அபிவிருத்தித் திட்டம் பூசைத்திரவியத்திற்கான கடைகள் அமைத்தல்

கதிர்காமப் புனித நகர அபிவிருத்தித் திட்டத்தில் இரண்டு நிரை பூசைத்திரவியங்கட்கான கடைகள் அமைப்பதற்கான இலாஞ்சணையிட்ட கேள்வி இணைப்படிகள் 1970, மாசி மாதம் 8 ம் திகதி மு. ப. 10 மணி வரை கொழும்பு 10, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தையில் உள்ள நாடு நகர நிருமாணப் பிரிவின் கேள்விச் சபைத் தலைவர் ஏற்றுக் கொள்வார். அதே நாளில் நாடு நகர நிருமாணப் பிரிவில் மு. ப. 10.15 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும் பொழுது கேள்விக்காரரும் சமூகமளிக்கலாம்.

2. கேள்விகள் நாடு நகர நிருமாணப் பணிப்பாளர், டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை, கொழும்பு 10, என்ற முகவரிக்கு விண்ணப்பித்துப் பெற்ற கேள்விப் பத்திரப் படிவத்தில் இருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரப் படிவங்கள் 1970, மாசி மாதம் 7 ம் திகதி பி. ப. 2.30 மணி வரை வழங்கப்படும். இவை சிவில் பொறியியல் வேலைகளுக்காக 1,50,000 ரூபாவிற்கும் அதற்கு மேலும் ஏதாவது அரசாங்கத் திணைக்களத்தில் பதிவுசெய்த திருப்திகரமான ஆதாரத்தையும் கேள்வி வைப்பாக 100 ரூபாவையும் கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்தில் உள்ள உள்ளூராட்சி அமைச்சிலாயினும் அல்லது கொழும்பிற்கு வெளியேயுள்ள எந்தக் கச்சேரியிலாயினும் கட்டிய பற்றுச்சீட்டை உடையவர்களுக்கு வழங்கப்படும்.

3. அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களும் கேள்விகள் அனுப்பலாம். அவை மேலே பந்தி 2 இல் குறிப்பிட்டதற்கான தொகையை ஏதாவது அரசாங்கத் திணைக்களத்தில் பதிவுசெய்திருத்தல் வேண்டும். அப்படியான சங்கங்கள், கேள்வி வைப்பிலிருந்து விதிவிலக்கப்படும்.

4. எல்லாக் கேள்விகளும் இலாஞ்சணையிடப்பட்டு உறையின் இடப் பக்க மேல் மூலையில் " கதிர்காமம் பூசைத்திரவியக் கடைகள் அமைத்தல் " எனக் குறிப்பிட்டுப் பதிவுத்தபாலிலோ இந்நோக்கத்திற்காக நாடு நகர நிருமாணப் பிரிவில் வைத்திருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட்டோ அல்லது நாடு நகர நிருமாணப் பிரிவு அலுவலக உதவியாளரிடம் கையளித்ததற்கான ஒப்புக்கொள்ளுதலையோ பெறவேண்டும்.

என். குணரத்ன,
நாடு, நகர நிருமாணப் பணிப்பாளர்.

நாடு நகர நிருமாணப் பிரிவு,
உள்ளூராட்சி அமைச்சு,
டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
1970, தை 11.

1–853—23.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,890

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### வடிகாலமைப்பு நிலமீட்சி திட்டங்களுக்கென சாதனங்களையும் இயந்திரங்களையும் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்

வடிகாலமைப்பு நிலமீட்சி திட்டங்களுக்கென சாதனங்களையும் இயந்திரங்களையும் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள், த. பெ. எண். 500, கொழும்பு என்ற முகவரியிலுள்ள காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சின் கேள்விச்சபைத் தலைவரால் 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேற்படி வெற்றுப்பத்திரங்கள், கொழும்பு 7, புள்ளர்ஸ் வீதியிலுள்ள நீர்ப்பாசன அதிபரின் அலுவலகத்தில் பெற்றுக்கொண்டபின் இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ந் திகதி வியாழக்கிழமை பகல் 12 மணி வரையும் வழங்கப்படும் கேள்வி வெற்றுப்பத்திரங்களை, கேள்விக் கட்டணமாக ரூபா 250 செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டைக் காண்பித்து பெற்றுக் கொள்ளலாம். மேற்படி கேள்விக் கட்டுப்பணம், கொழும்பு 7, புள்ளர்ஸ் வீதியிலுள்ள நீர்ப்பாசன அதிபரின் அலுவலகத்திலோ கொழும்பு தவிர்ந்த ஏனைய கச்சேரிகளிலோ செலுத்தியதாக இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை கொழும்பு 7, புள்ளர்ஸ் வீதியிலுள்ள நீர்ப்பாசன அதிபரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எல். ஓ. டி. எஸ். குணசேகரா,
நீர்ப்பாசன அதிபருக்காக.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
கொழும்பு 7,
1970 ந் ஆண்டு ஜனவரி மீ 13 ந் உ.

1–861—23.1.70 ம் திகதிய வர்த்தமானி இல. 14,890

## கமத்தொழில் திணைக்களம்

### அரசாங்கப் பண்ணைகளுக்கு புளி மாங்கொட்டைகள், சோடிக் கிடுகுகள் விநியோகித்தல் பாரங் கொடுத்தல் ஆகிய வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன

மேற்கூறப்பட்ட விடயம் சம்பந்தமாக அரக்கு முத்திரை வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 8.2.70 ஆம் திகதி மு. ப. 10 மணிவரையும் கமத்தொழில் அதிகாரி (பண்ணை முகாமையும் ஆக்கமும்) அவர்களால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) கரடியனாறு அரசாங்கப் பண்ணைக்கு (மட்டக்களப்பு மாவட்டம்) 6,000 சோடிக் கிடுகுகள் விநியோகித்தல் பாரங் கொடுத்தல்.

கோரப்படும் சோடிக் கிடுகுகளின் அளவுகள் நீளம் 6 அடிக்கு மேலும், பின்னல் அகலம் 13 அங்குலத்திற்கு மேலும் இருத்தல் வேண்டும். விநியோகித்தல் பாரங்கொடுத்தல் 15.2.70 ம் திகதிக்கு முன்னர் முடிவடைதல் வேண்டும். தேவைப்படும் திகதி பண்ணை முகாமையாளரால் அறிவிக்கப்படும். 100 சோடிக் கிடுகுகளுக்கு அறவிடும் தொகையே குறிப்பிட வேண்டும்.

(ஆ) வவுனியா அரசாங்கப் பண்ணைக்கு பூச்சிகளால் சேதப்படுத்தப்படாத 10,000 புளி மாங்கொட்டைகள் விநியோகித்தல் பாரங் கொடுத்தல்.

விதை மாங்கொட்டைகள் முறைக்கு 5,000 கொட்டைகள் வீதம் இரு முறைகளில் விநியோகித்தல் பாரங்கொடுத்தல் வேண்டும். விநியோகித்தல் பாரங்கொடுத்தல் 15.2.70 ம் திகதியிலோ அதற்கு முன்னரோ முடிவடைதல் வேண்டும். பழுதடையாத விதைகளுக்கு மட்டும் பணம் கொடுக்கப்படும். 100 கொட்டைகளுக்கு அறவிடும் தொகையையே குறிப்பிட வேண்டும்.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களிலும் செய்யும் வேலைகள் சேவைகளுக்கு வெவ்வேறான கேள்விப்பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப் பத்திரங்களுக்கும் ரூபா 10 வைப்புப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்ட தபால் உறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) கமத்தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாவிட்டால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோருக்கு (ப. மு. ஆ.) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல் வைத்த உறைகளை இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களடங்கிய தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர்க் குறிப்பு " (சேவையின் பெயரும் நிலையமும் கொடுக்கப்பட வேண்டும்) ஆகிய வேலைகளுக்கான கேள்விப்பத்திரம் " என்றுகுறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவைகிடைத்தமை பற்றிய உறுதிப்பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்காரருக்கும் அனுப்பப்படும். கேள்விப்பத்திரம் கோரும் முடிவுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட்களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக்காத கேள்விக்காரர் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில், கமத்தொழில் அதிகாரியுடன் (ப. மு. ஆ.) தொடர்பு கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்திற்கும் வைப்புப்பணமாகக் கட்டிப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன்தினம் பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகங்களிலும் அல்லது கமத்தொழில் இலாகா, பேராதனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொன்தராத்துக்காரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவிதக் கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ள மாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களினால் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்கத் தவறின் ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்டஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பத்திரகாரர் விரும்பின் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரசன்னமாகலாம். யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் (ப. மு. ஆ.) கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினால் தெளிவாக எழுதப்படவேண்டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பத்திரக்காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முகவரி ஆகிய வற்றை பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையில் 5 வீதத்தை பிணைப்பணமாக கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப் பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப் பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்துராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாதிடப்படும் பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய்யாமலோ குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியாக்காமல் இருந்தாலோ அவரது கொந்துராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ்வேலையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்குகள் செய்வதற்கு கமத்தொழில் அதிபர் உரிமையுடையவராவார்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுதையுமோ சில பகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட பயிற்றப்படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்துதல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி மந்திரியின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெறாது இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும்.

" இலங்கையர் " என்னும் பதம் இலங்கையின் வம்சாவழியினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பளசட்ட திட்டங்களுக்கமைய இக்கொந்தராத்தில் வேலை பார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலைபார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப்பட்டியல், வரவுப்பட்டியல் ஆகிய தஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரக்காரருக்கு நேரடியாக, அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக கருதப்படும்.

